தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)

ஆணை எண். 071 /பேரூ/2021

நாள் 26.10.2021

திரு. J. சீனிவாசன்,
உத்தமபாளையம், தேனி மாவட்டம் ... முறையீட்டு மனுதாரர்

திருமதி. பா. ஜெயலட்சுமி,
செயல் அலுவலர், கோம்பை பேரூராட்சி
தேனி மாவட்டம் ... எதிர்மனுதாரர்

தேனி மாவட்டம், உத்தமபாளையம், தேவாரம், பென்னிகுயிக் நகரைச் சேர்ந்த J. சீனிவாசன் அவர்களின் முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 18.05.2020 அன்று பெறப்பட்டு 071/2021 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

தேனி மாவட்டம், உத்தமபாளையம், தேவாரம் பென்னிகுயிக் நகரைச் சேர்ந்த திரு. J. சீனிவாசன் என்பவர் தேனி மாவட்டம், கோம்பை பேரூராட்சி செயல் அலுவலரான திருமதி. பா. ஜெயலட்சுமி என்பவர் அரசு விதிமுறைகளை மீறி பல்வேறு வகைகளில் அரசு பணத்தை போலி வவுச்சர்கள் போட்டு சுருட்டிக்கொள்கிறார் என்றும், பேரூராட்சியில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்துவரும் சரவணன் என்பவருக்கும் பேரூராட்சி பொது நிதியிலிருந்து சம்பளம் வழங்கப்பட்டு வருகிற நிலையில், மேற்படி சரவணனை கொண்டு

செய்யப்படும் பைப்லைன் பழுது, கேட்வால்வு பழுது, பொது குழாய் பழுது, சாக்கடை சுத்தம் செய்தல், கழிப்பறை சுத்தம் செய்தல், மெயின் குழாய் உள்ளிட்ட பணிகளுக்கு அவர் பெயரில் பொய்யாக வவுச்சர் போட்டு அந்தப் பணத்தை அவரிடமிருந்து செயல் அலுவலர் திருமதி. ஜெயலட்சுமி பெற்றுக்கொள்கிறார் என்றும், இது ஒருவகையான விஞ்ஞான ரீதியான மோசடி ஆகுமென்றும் தெரிவித்துள்ளார். மேலும், அரசிடமிருந்து/பேரூராட்சியிடம் இருந்து மாதாந்திர ஊதியம் பெறும் பணியாளர்களைக் கொண்டு பொது மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் செய்வதும், அந்தப் பணிக்கு அவர்களுக்கு மாத ஊதியம் வழங்குவதும், பின்பு அதே நபர்கள் பெயரில் அதே பணியினை செய்ததாக தனியாக போலி வவுச்சர் போட்டு அரசு பணத்தினை கொள்ளையடிப்பதும் அப்பட்டமான ஊழல், அதாவது ஒரே பணிக்கு இரண்டு முறை அரசுப் பணம் செலவிடப்படுகிறது, ஒன்று ஊதியமாகவும், மற்றொன்று போலியாக செலவுச் சீட்டு தயாரித்தும் கொள்ளையடிக்கப்படுவதாகவும் தமது புகார் மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் பேரூராட்சி செயல் அலுவலர்கள் ரூ.10,000/–க்கு மேற்பட்ட செலவினங்களுக்கு பேரூராட்சியின் உதவி இயக்குநரின் ஒப்புதலைப் பெற்றபின்பே செக் போடவேண்டும். ஆனால், திருமதி. ஜெயலட்சுமி இந்த நடைமுறையை பின்பற்றுவதே இல்லையென்றும், இதன் மூலம் இவரால் விதிகளை மீறி பல லட்சக்கணக்கான ரூபாய் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். மேலும், தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி பிரதிநிதிகள் இல்லாததால், ஒவ்வொரு பேரூராட்சிக்கும் தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டு, அவர்களிடம் செய்யப்பட்ட செலவினங்களுக்கு ஒப்புதல் பெறவேண்டுமென்பது பேரூராட்சிகளில் நடைமுறையில் உள்ள விதி என்ற போதும், திருமதி. பா. ஜெயலட்சுமி, செயல் அலுவலர், கோம்பை பேரூராட்சி தனி அலுவலரான தேனி மண்டல பேரூராட்சிகள் உதவி இயக்குநரிடம் தன்னால் மேற்கொள்ளப்பட்ட செலவினங்களுக்கு மன்றக் கூட்டம் நடத்தி எவ்வித ஒப்புதலும் பெறவில்லை என்றும், இது செயல் அலுவலரின் அதிகார வரம்பை மீறி பெருமளவில் அதிகார துஷ்பிரயோகம் செய்து சொத்துக் குவிப்பு செய்துள்ளார் என்றும், அரசு விதிகளின்படி பேரூராட்சி செயல் அலுவலர்கள் காசோலை அனுமதிக்கும் வரம்பு ரூ.10,000/–க்கு உட்பட்டே வரையறுக்கப்பட்டுள்ள போதிலும், இவர் தனது அதிகார வரம்பை மீறி ரூ.2,00,000/–, ரூ.3,00,000/– இலட்சங்களில் விளையாடியுள்ளதாகவும், இவர் வசிக்கும் ஓடைப்பட்டி பேரூராட்சிக்கு உட்பட்ட மூர்த்திநாயக்கன்பட்டியில் தனது தாயார் பெயரில் ரூ.80,00,000/–க்கு (ரூபாய் எண்பது லட்சம் மட்டும்) ஆடம்பர பங்களா கட்டியுள்ளார் என்றும், வாடகை காருக்கு தினமும் ரூ.2000/– செலுத்தி காரில் பவனி வருகிறார் என்றும், தனது பெண் குழந்தைகளுக்கு 200 பவுன் நகை எடுத்து பதுக்கி வைத்துள்ளதாகவும், எனவே அதிகார வரம்புகளை மீறி தனது ஆக்டோபஸ் கரங்களால் கோம்பை பேரூராட்சியினை கபளீகரம் செய்து வரும் செயல் அலுவலர் பா. ஜெயலட்சுமி மீது உரிய விசாரணை மேற்கொண்டு அவர் மீது நடவடிக்கை மேற்கொள்ள ஆணையினை பிறப்பிக்குமாறும் இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. இப்புகார் மனு தொடர்பாக கோம்பை பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் முறையீட்டு மனுதாரர் ஆகியோர் 15.03.2021 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு இம்முறைமன்ற நடுவத்தின் 1.3.2021 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன. மனுதாரர் விசாரணைக்கு ஆஜராகவில்லை. கோம்பை பேரூராட்சியின் செயல் அலுவலராக (பொறுப்பு) பணிபுரியும் பஷீர் அஉறமது என்பவர் 15.03.2021 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளார்:-

"கோம்பை பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலர் திருமதி. பா. ஜெயலட்சுமி என்பவர் மீது முதல் விசாரணை தொடங்கும்பொருட்டு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தின் மூலம் காசோலைகள் வழங்கும் பதிவேடு, ஊழியர்களின் ஊதிய விவரப் பதிவேடு, 2018–2019 மற்றும் 2019–2020 ஆண்டிற்கான பணி ஆணைகள், இருப்புப் பதிவேடு போன்ற பதிவேடுகளை தேனி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கணிகாணிப்பு இயக்ககம் தனது PE 05/2020/TN 9.6.2020 நாளிட்ட கடிதம் மூலம் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அப்பதிவேடுகள் கோம்பை பேரூராட்சி கடிதம் ந.க.எண்.242/2019 நாள் 15.7.2020 உடன் இணைத்தனுப்பப்பட்டுவிட்டது என்பதை இம்மன்றத்தின் முன் எனது வாக்குமூலமாக அளிக்கின்றேன். மேற்கண்ட விசாரணை தற்போது நிலுவையில் உள்ளது என்கின்ற விவரத்தையும் இம்மன்றத்தின் முன் தெரிவித்துக்கொள்கிறேன். மேற்கண்ட இரண்டு கடிதங்களின் நகல்களையும் இம்மன்றத்தின் முன் சமர்ப்பிக்கின்றேன்" என்று தெரிவித்துள்ளார்.

3. மேற்கண்ட புகார் மனு மீதான விசாரணையை 11.8.2021 அன்று நடத்திட உத்தேசித்து, அதன் அடிப்படையில் மனுதாரர் மற்றும் செயல் அலுவலர், கோம்பை பேரூராட்சி ஆகியோரை மீண்டும் விசாரித்திட 11.8.2021 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு இம்முறைமன்ற நடுவத்தின் 12.7.2021 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பிவைக்கப்பட்டன. இம்முறையும் இம்முறைமன்ற நடுவ நேரடி விசாரணைக்கு முறையீட்டு மனுதாரரான திரு. J. சீனிவாசன் ஆஜராகவில்லை. 11.8.2021 அன்று கோம்பை பேரூராட்சி செயல் அலுவலர் (பொறுப்பு) கோ. சுப்பிரமணியன் நேரடி விசாரணையில் ஆஜராகி 15.03.2021 நாளிட்ட நேரடி விசாரணையின்போது செயல் அலுவலர் (பொறுப்பு) பஷீர் அகமது அளித்த அதே வாக்குமூலத்தையே அளித்துள்ளார்.

4. இந்நேர்வில், முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு, முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ள புகார் குறித்து கோம்பை பேரூராட்சி முன்னாள்/இந்நாள் செயல் அலுவலர்கள் 15.03.2021 மற்றும் 11.08.2021 ஆகிய நாட்களில் இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற நேரடி விசாரணையின்போது ஆஜராகி அளித்துள்ள வாக்குமூலங்கள் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள்/கடிதங்கள் இம்முறைமன்ற நடுவத்தினால் மிக கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. தேனி மாவட்டம், கோம்பை பேரூராட்சியின் முன்னாள் செயல் அலுவலர் திருமதி. பா. ஜெயலட்சுமி என்பவர் மீதான குற்றச்சாட்டுகள் தொடர்பாக ஊழல் தடுப்பு மற்றும் கணிகாணிப்பு இயக்ககத்தினால் உரிய விசாரணை தொடங்கப்பட்டு, அதன் தொடர்பாக ஆவணங்கள் யாவும் அவ்வியக்ககத்தின் தொடர் விசாரணைக்காக அனுப்பிவைக்கப்பட்டு மேற்படி விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறதென்று

கோம்பை தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தமது வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளார். மேலும், கோம்பை தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பிவைத்துள்ள 6.9.2021 நாளிட்ட அறிக்கையில் முறையீட்டு மனுதாரர் தமது புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அனைத்தும், தேனி மாவட்ட ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்திற்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ள ஆவணங்களில் உள்ள பதிவுகளின் சாராம்சமாக உள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார். 2014ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம், விதி 10 (3) (a)ல் முறைப்படியான விசாரணை மேற்கொள்ளப்படுகிற பொருட்பாடு தொடர்பான எதனையும் முறைமன்ற நடுவம் விசாரணை செய்தல் கூடாது. எனவே, இம்முறையீட்டு மனு மீதான விசாரணையை இம்முறைமன்ற நடுவம் மேற்கொண்டு தனியாக விசாரிக்கத் தேவையில்லை என முடிவுசெய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

2021ஆம் ஆண்டு, அக்டோபர் திங்கள் 26–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

ஒம்/– x x x x x
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்
திரு. J. சீனிவாசன்,
த/பெ ஜெயராமன், பென்னிகுயிக் நகர், தேவாரம், உத்தமபாளையம், தேனி மாவட்டம்

செயல் அலுவலர், கோம்பை பேரூராட்சி, தேனி மாவட்டம்–625522

நகல்:
மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்.
இ.கோ/உதிரி

–/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/–

செயலாளர்